# மானுடம்

சிற்றிதழ் - 12



ஆசிரியர்
திருமலை சுந்தா

10/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக் கூர்மை
படைத்தவர்கள் அருகில்
இருந்தால் வேறு துணை
எதுவும் தேவையில்லை
- புதுமைபித்தன் -

அட்டைப்படம் : சிசு



நேர்மை – பொறுமை
மானுட நேயம்

மானுடம்
அம்மா பதிப்பகம் 172 பிரதான வீதி
திருகோணமலை

சிற்றிதழ் –12
2011 – ஆனி

இதழில்.........

* பசி
* மனக்குமுறல்
* தயை காட்டும் மானுடம்
* பரிதாபமாய்
* கருத்துக் கலசம்
* கடன்
* பிச்சைக்காரன்
* பாதை மாறிய பயணங்கள்
* மனம்
* நீ மிதமாக ...........

ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு

## ஆசிரியரின்....



மானுடம் சிற்றிதழ் – 12 உங்கள் கரங்களில் தவழுகின்றது

உலக இலக்கியமோ அல்லது தேசிய இலக்கியமோ படைத்திட பயிற்சி களமாக மானுடம் வெளிவந்து கொண்டிருப்பது நீங்கள் அறிந்த தொன்று.

இளம் எழுத்தாளர்களின் ஆக்கங்களோடு பயிற்சி பெற்ற எழுத்தாளர்களின் ஆக்கங்களும் மானுடம் பக்கங்களை அழகு செய்கின்றன.

இம்முறை இரண்டு நூல்கள் பற்றிய அறிமுகமாக உரைகல் பகுதி மிளிர்கின்றது.

எழுத்தாள பெருமக்களே உங்கள் ஆக்கங்களை பிரசுரம் செய்திட நாம் காத்திருக்கின்றோம்.

சமூக மாற்றமல்ல சமூக மாற்றத்தை ஏற்படுத்த வல்ல எழுத்தின் முதல்படி மானுடமாக இருக்கட்டும்

அடுத்த இதழில் விரைந்து சந்தித்து பேசுவோம்.

அச்சு : அஸ்ரா அச்சகம்.
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

திருமலை.இ.மதன்

புதிதாக திறக்கப்பட்ட "பாஸ்ட் பூட்" கடையில் நானும் பத்துவயது மகனும் அமர்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு " பீட்சா" ஓடர் பண்ணிவிட்டு நீண்ட நாட்களாக மகன் கேட்டுக் கொண்டே இருக்கிறார். "அப்பா ஒரு 'பீட்சா' வாங்கித்தாங்க சாப்பி விருப்பமாயிருக்கு நல்லா இருக்கும் அப்பா" என்று நானும் பல சாட்டுகளை சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன், காரணம் அதன் விலை இரண்டு நாட்களுக்கு மூன்றுவேளை சாப்பிடப் போதுமான பணத்தை இதன் ஒருவேளைக்கு கொடுக்க வேண்டியிருப்பதனால் தான் நான் அதனைத் தவிர்க்க முனைந்தேன். ஆனாலும் மகனின் ஆசையை ஒரு தடவையாவது நிறைவேற்ற வேண்டாமா.....? அதனால்தான் பாடசாலை விட்டதும் அவரை இங்கு அழைத்து வந்தேன். ஓடர் பண்ணியது வரும்வரை வீதியில் செல்லும் வாகனங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாமே என்று கண்களை வீதியோரமாக சுழலவிட்டேன்.

- குறுங்கதை -



அப்பப்பா எத்தனை வாகனங்கள் எவ்வளவு நெரிசல்கள் அதிகரித்து வாகனங்களுக்கு அமைய வீதிகளும், வீதி ஒழுங்கு களும் மாற்றி அமைக்கப் படாதது தான் நெரிசலிற்குக் காரணம் என எனக்குத் தோன்றுகிறது. வரவர வாகனங்கள் அதிகரித்துக் கொண்டே போகிறதே இவற்றை வாங்குமளவிற்கு எமது நாட்டின் பொருளாதாரமும் தனி நபரின் வருமானமும் அதிகரித்து விட்டதா என்ன?

இப்படியான எண்ணங்களில் இருந்த என்னை அந்தக் காட்சி திரும்பிப்பார்க்கவைத்தது. வீதியில் எதிர்ப்பக்கத்தில் ஒரு ஓரமாக இருந்த இருவர். ஒரு சிறுமியும் சிறுவனும் அக்கா தம்பி போல் தெரிகிறது. மிகவும் மெலிந்த தோற்றம் 'எலும்பும் தோலும் ' என் பார்களே அதுபோல், குழி விழுந்த கன்னம், சுருங்கிய நெற்றி, காய்ந்து உலர்ந்த உதடுகள் ஒட்டிய வயிறு, பறட்டைத்தலை, எண்ணெய் வைத்து பல வருடங்கள் இருக்கும் போல், இருவரது ஆடைகளும் கிழிந்து அழுக்குப் படிந்து காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பசித்திருக்கிறார்கள் போலும் சாப்பிட்டு பலநாட்கள் ஆகியிருக்கும் என்பது அவர்கள் சோர்வான கண்களில் தெரிகிறது. அவர்கள் பேசுவது வாகன சத்தத்தில் காதில் கேட்காவிட்டாலும் என்னால் உணரமுடிகிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கண்களால் அளந்தேன்.

அச்சிறுவனுக்கு பசிதாங்க முடியாது அழுகிறான். அவன் தமக்கை போலுள்ள அவள் அவனைத் தேற்றுகிறாள். அவளுக்கும் பசித்திருக்கிறது. கண்களில் பதிந்திருந்த குழாயில் தண்ணீர் வருகிறதா என்றுஅதனைத்திறந்து பார்க்கிறாள் அவள்...... வெறும் காற்றுத்தான் வருகிறது. அந்தப் பங்குனி வெய்யில் அவர்களை சுட்டெரிக்கிறது. குடிக்கத் தண்ணீரும் கிடைக் காததால் இருவரும் பக்கத்தேயுள்ள அக்குழா யடியிலேயே சுருண்டு படுத்து விடுகிறார்கள். பசிக்களைப்பில் மயங்கிவிட்டார்கள் போல் தெரிகிறது.

"அண்ணே........ இந்தாங்க...."

அந்த ஹோட்டல் பையன் முதுகில் தட்டியபோதுதான் நினைவிற்கு வந்தேன்.

அவன் தந்த 'பீட்சா' பார்சலை வாங்கி அருகில் இருந்த மகனிடம் கொடுத்து அவனைப் பார்த்து புன்னகைத்தேன்.

அவனுக்கு மகிழ்ச்சிதான் முகத்தில் சிறிய முறுவல் தெரிந்தது. அவன் கையைப் பற்றிக் கொண்டு கடையை விட்டு வெளியேறினேன்.

தெருவோரம் நின்றிருந்த எனது துவிச்சக்கரவண்டி அருகில் வந்தபோது மகன் எனது கையை விடுவித்துக் கொண்டு "அப்பா அந்தப்பக்கம் போவமா" என்று கேட்டுக்கொண்டே எனது பதிலுக்குக் காத்திராமல் வீதியை கடந்து சென்றான்.

மகனின் இச்செயலைக் கண்டு அதிர்ச்சியுற்ற நான் துவிச்சக்கர வண்டிய நிறுத்திவிட்டு அவன் பின் விரைந்தேன்.

பாதுகாப்பாக வீதியைக் கடந்த மகன் ஓடிச்சென்று அக்குழாயடியில் நின்றான். அவ்விரு சிறார்களையும் பார்த்துக்கொண்டு

நானும் விரைந்து அவனருகில் சென்றேன்

அவன் அவ்விரு சிறார்களையும் எழுப்பி தான் கையில் வைத்திருந்த, அவன் அதிகநாட்களாக சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டு வாங்கிய அந்த 'பீட்சாவை' அச்சிறுவன் கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணித்தான். அச்சிறுவனை அணைத்து என்கையை பற்றிக் கொண்டு ஆனந்தமாக விளையாடிக்கொண்டு

..... என்மகன்.............

என் கண்கள் கசிகின்றன

"அப்பா வாங்கப்பா போகலாம்......."

என் மகனின் இந்த குரல்

என் மகனை ஆசை ஆசையாகப் பார்க்கின்றேன்.

கற்பனையல்ல

15.03.2011

# மனக்குமுறல்



மனிதனையே காண
முடியவில்லை
அப்படியிருக்க
கடவுளை
காண்பதெப்படி?

* * *

பொருளாதார
வீழ்ச்சிதான் வாழ்வின்
இழப்பென்பர்
அறிவாற்றல்
அற்றவர் தான்
பணமே
எல்லாமெனில்
நல்லுறவும் வாராதே
குடும்ப உறவும்
அறுமே விரைந்து

* * *

காதலென்றார்
ஏமாற்றிய உடலுறவால்
அதற்கு சாவுமணியும்
அடிக்கின்றாரே
நல்லவராய்

* * *

குறைபேசி
பரிகசித்து தாழ்த்தி
தம் வாழ்வில்
சிறப்படைவார்
பலரோ?

* * *

தோல்வி
பாடத்தை கற்றிடுமே
அவமானத்தை
தாராது வெற்றியை
தருமே விரைந்து

* * *

ஆயுதமல்ல
அறிவாலும் போரிடலாம்
புரட்சியும் செய்யலாம்
அகிலத்தையும்
ஆழுமாமே தான்

* * *

இன்றைய
அரசியல் இரத்தம்
சிந்தாத புரட்சியிலே
பூக்காத பூவே
தானோ?

- சூசை எட்வேட் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தயை காட்டும் மானுடம்

பொருளாதார விழுமியங்களின்
விழிம்பில்
பொருள் தேடும் மானிட
ஜீவன்களுக்கு
உணவு உவந்தளிக்க யார்
முன்வருவார்
இப்பிஞ்சுள்ளங்களின்
வயிற்றுப்பசியாற்ற

மானிடா தாயின்றியோ
தந்தையின்றியோ
மனமுவந்து தயைகாட்ட யார்
வருவார் - இப்பிஞ்சு
முகங்களுக்கு
மானிடம் தயைகாட்டாத வேளை
வீதியோர மரநிழல்கள் தான்
மனமுவந்து தயைகாட்டுகிறது.

மனிதா! மானுடம் போற்றும்
மானிடா!
கந்தைப்புடவையும் கட்டுடல்
ஒடுங்கி
கண்குழி விழுந்த மேனியுமாய் -
இப்பிஞ்சுமனம்
படுகின்ற பாட்டை ஒருமுறை
யேனும் பார் மானிடா

நாதியற்ற நடைப்பிணங்களால்
நிர்க்கதியற்று இடைநடுவே - எம்
ஜீவஉள்ளங்கள்
உருளுகின்ற உலகினிலே
இவர்களுக்கு உரம்கொடுத்து
உயர்த்தி வைக்கவரும்
மானுடர்களே
மானுடம் போற்றும் மானிடர்கள்

பொத்தானையூர்
T. தேசிகன்

## பரிதாபமாய்

பட்டினி கிடந்து
ஒட்டியுலர்ந்த வயிறுடன்
எட்ட முயல்கிறோம்
ஏதேனும் உணவு
கிடைக்கு மென்று!



தட்டிக் கழித்த பின்
தட்டிக் கேட்பார்
கிட்ட வரமாட்டார்

கிடைப்பதைப் பெற்று
தானுண்பார்
தொட்டுத் தடவி
தேன் சுவை என்பார்
தேன் மனம் கொண்டோர்!

போசாக்கில்லாமல் நாமும்
பாசாங்குபண்ணி அவர்களும்
காலத்தோடு காலமாய்
காலமாகியும் காலாவதியாகும்!

- செ.ஞானராசா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக் கலசம்




'எத்தனை பெயரில் கருவில் அழைத்தாலும் அருள் புரிவது ஒரு கடவுளே.'

நூலக துறைக்கு புது முயற்சி கருத்துக் கலகம்.'இந்நூலில் ஆரம்ப 'கருத்து கலசமே' மேல் குறிப்பிட்ட வரிகள் இத் தொகுப்பின் ஆசிரியர் சூசை எட்வேட். அகில இலங்கை இளங்கோ கழசம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

திருக்குறளைப் போல இரண்டு வரிகளில் ஏழு சொற்கள். 'என் சிந்தனை பூக்கள் இரண்டு வரிகள். என்னை ஆதரித்து 'தெருக் குரல்' என மகுடமிட்டு என் ஆக்கத்தை பிரசுரம் செய்து இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து என்னை இன்னும் எழுது தூண்டுபவர் 'நீங்களும் எழுதலாம்' சிற்றிதழ் ஆசிரியர் திரு.எஸ்ஆர். தனபாலசிங்கம். என தன் என்னுரையில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நன்றி உணர்வு அவரின் உள்ளத்தை பிரதி பலிக்கின்றது. அதே போலவே நூலின் 103 பக்கங்களும் இருக்கின்றன.

'முயற்சி இல்லாதவர்களின் முனகலுக்கு எல்லாம் நான் அஞ்சேன். சூசை எட்வேட்டின் ஏனைய நூல்களை பிரசுரம் செய்வேன்.' என்ற இந்நூலை வெளியிட்ட திரு.பெரிய ஐங்கரன் பாராட்டப்பட வேண்டியவர். பதிப்பக துறைக்கு ஆரோக்கிய மான கருத்தாகவே கருதுகின்றேன்.

எஸ். எஸ். டிஜிற்றல் 58 வித்தியாலயம் வீதி திருக்கோண மலையில் அச்சுப்பதிவு செய்யப் பட்டுள்ளது வடிவமைப்பில் அனுபவம் தெரிகின்றது.

முகப்பு படம் கீறிய க.லக்ஸ்மன் கவனிக்கப்பட வேண்டிய ஓவியர். அவருக்கு ஒரு சபாஸ். நூலை படிக்க வேண்டு மென்ற உணர்வினை அட்டைப்படம் ஏற்படுத்தி விட்டது.

உரைகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சூசை எட்வேட்' புதிய துறையை மனித நேயம் நோக்கி ஏற்படுத்தி இருக்கின்றார். வித்தியாசமான உணர்வை வாசகனுக்கு தந்திருக்கின்றார். எவர் எப்படி விமர்சித்தாலும் நாம் இவருக்கு துணை போவோம். என மானுடம் சிற்றிதழ் ஆசிரியர் கூறியது. நினைவுக்கு வருகின்றது.



- சூசை எட்வேட் -

1004 அன்புவழிபுரம் திருகோணமலை (தொ.இல.3268838) என்ற ஆசிரியர் முகவரியோடு தொடர்பினை ஏற்படுத்துங்கள். இவரை நாமும் வாழ்த்துவோம்.

- வள்ளிமைந்தன் -

# கடன்

ஒரு ஏழை உழவன் கையளவு நிலத்துக்கு சொந்தக்காரன் வரகு விதைக்கு கடன் பட்டான் விளைந்ததோ அந்தோ......எருதுகள் கொண்டு மிதிக்கும் வேலை இல்லை.

- பொற்கொடி-

வீட்டாரை கொண்டு வரகை, கசக்கி பெற்றான் பெரும் பகுதியை கடன்காரன் பறித்தான். மீதியை பாணர்களுக்கு வழங்கினான். தன் குடும்பத்தாரின் பசிதீர்க்க...... மீண்டும் கடனுக்கு வரகு கேட்டு நின்றானாம். இது புறநாறாற்றுப் பாடல் ஒன்றின் புலம்பல் குரல்.

'எருது கால் உற அது
இளைஞர் கொன்ற
ஜில் வினைவருகின் புல்லென்
குப்பை
கொடுத்த கடவர்க்குக்
கொடுத்த மிச்சில்
பசித்த பாணர் உண்டு
கடைதப்பலின்
ஒக்கல் ஒற்கும் சொலிய
தன் ஊர்ச் சிறு புல்வாளர் முகத்து
அவை கூறி
வரகு கடன் இறக்கும் '

( புறநானூறு 327)

சங்ககால மென்பது பொற்காலமா? பேசுவதும் எழுதுவதும் உண்மை வரலாறா? சிந்திப்போமே!

- சங்ககாலம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சைக்காரன்

திருமலை.சுந்தா



தர்மம் தாங்க
கையில்
ஊன்று
கோலுடன்
தோளில்
உரப்பையினை
சுமந்த வாறு
கடைக்கு
முன்பாக
அவன்
நின்றான் கடைக்கு பொருட்களை
கொள்வனவு செய்வதற்காக
வந்திருந்த
வாடிக்கையாளர்களுடன்
கலகலப்பாக பேசி தன்
வியாபாரத்தில் கவனமாக இருந்த
கடை முதலாளி .............
'பிச்சைக்காரனை முதலில்
அனுப்பு ' காசாளருக்கு திரும்பி
குரல் கொடுத்தார். காசாளர் ஒரு
ரூபாய் குற்றியினை 'தர்மம்'
கேட்டவரிடம் நீட்டினார்.
தர்மம் வாங்க வந்தவன்
முதலாளியை நோக்கி....
'ஐயா என்னையா பிச்சைக்காரன்
என்று சொன்னீங்க இல்ல பிச்சை
தார நீங்கதான் பிச்சைகாரன்......?
என்றான்.
முதலாளி அவன் பக்கம் திரும்பி
முகத்தினால்
அவனிடமே வினா எழுப்ப.........
அவன் சொன்னான்....... " கடை
வைச்சிருக்கிறவனை கடைக்காரன்
என்கிறோம். மரக்கறி
விக்கிறவனை மரக்கறிகாரன்
என்கிறோம். தச்ச
வேலைசெய்யிறவனை தச்சன்
என்கிறோம். அப்ப பிச்ச
தாறவனை எப்படி அழைப்பது
பிச்சைக்காரன் என்று தானே
அப்ப நீங்க தானேபிச்சைக்காரன்.
நான் இல்லை தானே.........
முதலாளியின் முகம் வியர்த்தது.
நாவில் வார்த்தைகள் எழவில்லை.
அவனை அதிசயமாக பார்த்தார்.
கிடைத்த ஒரு ரூபாய் குத்தியினை
தன் காதில் செருகியவாறு தர்மம்
கேட்டவன் அடுத்த கடையை
நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

- கற்பனையா? -

- குறுங்கதை -

## நிவர்த்தி......

இரவினில்
தெரு விளக்குகள்
எரிய வில்லை
பகலினில்
எரிகின்றன
விட்ட குறையை
நிவர்த்தி செய்ய

- சிசு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை மாறிய பயணங்கள்




உரைகல்

*திருமலை.இ.மதன்*

திருக்கோணமலை அம்மா பதிப்பகத்தினரின் பன்னிரண்டாவது வெளியீடு பாதை மாறிய பயணங்கள் திருமலை இ.மதன் இச் சிறுகதைக் தொகுப்பின் ஆசிரியர். இது இவரின் முதலாவது கன்னி முயற்சி. இவரின் இவ் முயற்றிக்கு அம்மா பதிப்பகத்தினர் துணை போயிருக்கின்றார்கள்.

மொத்தம் இத் தொகுப்பில் 28 சிறுகதைகள் உண்டு கதை சொல்லும் போக்கில் பல உத்திகளை கையாள முயன்றிருப்பது அவரது ஆர்வத்தை புலப்படுத்துகின்றது. என பிரபல சிறுகதையாளர் திரு.க.கோணேஸ்வரன் தன் வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

சிறுகதைக்கு வரைவிலக்கணம் இருக்கின்றதா? பலர் பலவிதமாக கூறுகிறார்கள் எழுத்தாளர்கள் இவ் வரைவிலக்கணங்களுக்குள் தம்மை கட்டுபடுத்த வேண்டு மென்ற கட்டாயமில்லாது போனாலும் தெரிந்திருப்பது நியாயமே.

நூலாசிரியர் இ.மதன் இதனை புரிந்து கொள்வது அவரின் சிறுகதை முயற்சிகளுக்கு பெரிதும் உதவுமென நம்புகின்றேன்.

இலக்கியம் எந்தளவு சமூக மேம்பாட்டிற்கு உதவும் என்பது பற்றி நூலாசிரியர் புரிதல் வேண்டும்.

தனி மனித உணர்வுகள் எந்தளவு சமூக அந்தஸ்து பெறுகின்றது, என்பது பற்றி எழுது கோலை தாளில் ஊன்றும் முன்பே அசை போடுவது நல்லது.

எழுதியதை எல்லாம் அச்சில் பார்த்து விடவேண்டு மென்பது ஆரம்ப எழுத்தாளர்களின் உணர்வு தான். அதில் அவர்கள் படுகின்ற மகிழ்ச்சியும் அள வில்லாததே.

'அம்மா பதிப்பகம்' இலக்கு நோக்கிய சிறுகதைக்கான பாதையினை இ.மதனுக்கு இத் தொகுப்பின் மூலம் ஏற்படுத்தி விட்டது.

இனி இப்பாதையில் பயணம் செய்து அவர் பிரகாசிப்பது, ஏன் வானில் துருவநட்சத்திரமாக விழங்குவது அவரைப் பொறுத்த விடயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15, கஸ்கிசன் வீதி திருக்கோணமலை என்ற முகவரியில் ரூபாய் 300/- கொடுத்து "பாதை மாறிய பயணங்கள்" என்ற சிறுகதைத் தொகுப்பினை நீங்கள் பெறலாம்.



*- திருமலை*
*இ. மதன் -*

அட்டைப்படம் அ.அருள்பாஸ்கரன். மனதில் நிறைந்திருக்கின்றார்.

ஆதரிக்க வேண்டியது கட்டாயம் ஒவ்வொருவரின் பங்காகும் இவரின் அடுத்த 'நூலினை' எதிர்பார்ப்போமே

*- வள்ளிமைந்தன் -*

# மனம்,,,,



காலம்
கொடிதென்பர் ...
நாளை
விடிபொழுதில்
எமக்காக எத்தனையோ
காத்திருக்கின்றன
நண்பா.......
நன்மையோ....
தீமையோ...
நாம் எதிர்பார்த்திருந்தா....
வருகின்றன...போகின்றன
நண்பா....

தாங்கித் தான்
தீர வேண்டும்
சொல்லுவதும் சுகம்
ஆனாலும்
மானுடராக
பிறந்தோமே
பாவிகளின்
பிறப்பு நாம்
நண்பா.....

எல்லையில்லா
எதிர்பார்ப்பும்
நினைவுகளின்
மதமிஞ்சிய
வேகமும்
மனிதனின்
பொய்யான
வாழ்வென்று

எதிர்பார்த்தே
காலத்தை
கழிப்போமே
நண்பா

எது வரினும்
வந்து விட்டு
போகட்டுமே
மனம்... மனம்
நண்பா
கவனம்.



*- ப.மனோகரன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ மிதமாக நான் மிகையாக.....

*- இவள் பாரதி -*

உன் வார்த்தைகள்
ஒரு திறவு கோல்.....
என்னுள்
பூட்டப்பட்டிருக்கும்
அத்தனை
அறைக்கதவுகளையும்
திறந்து விடுகிறது.

❧ ❧ ❧

சில காயங்களை
எப்படி வந்ததென்று
அறியாமல் தான்
சுமந்து வருகின்றேன்
நேசத்தைப்போல்

❧ ❧ ❧

தோள் சாய்ந்து
உறங்குகிறேன்
எட்டிப் பார்த்துவிட்டு
தானும் உறங்குகிறது.
காதல்

❧ ❧ ❧

என் நேசம் தான்
உன்னைக்
காயப்படுத்திவிட்டது
என் மரணம்



உன்னை
மீட்டெடுக்கிறதா
பார்க்கலாம்

❧ ❧ ❧

ஒன்றை
இழந்தால்தான்
அதன் மதிப்பறிய
முடியுமெனில்
என் மதிப்பை
நீயறிய வேண்டாம்
என்னை இழந்து
நானும் கூட

❧ ❧ ❧

நீ
கொடுக்கும்
அனைத்தையும்
நேசிக்கிறேன்
வலியையும்

❧ ❧ ❧



என்னிடமிருக்கும்
அனைத்தையும்
உனக்குத் தந்து
விட்டுத்தான்
செல்வேன்
இவ்வுலகிலிருந்து

*- நன்றி -*

*வி.ஜீவகுமாரன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org